(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes. The Tamilnad Taxi and Auto Drivers' Union intimated that the workers employed in Taxi and Auto Industry would resort to a token strike on 25th July 1963.

(*b*) The Labour Officers I and II, Madras, explained to the Union the circumstances under which the Motor Transport Workers Act, 1961, could not immediately be extended to the transport undertakings employing less than five workers and advised the Union to avoid the strike. The proposed token strike did not materialise.

துணைகடவு அணைத் திட்டம்

** 303 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

பரம்பிக்குளத் திட்டத்தில் சேர்ந்த துணைக்கடவு அணைத் திட்டவேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

THE HON. SRI V. RAMAIAH : The work was started on 1st July 1963.

Irrigational facilities from Kundah Waters

* 304 *Q.*—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to provide irrigational facilities from the surplus water of Kundah to the people of Avanashi, Sulur, Nambiyur, Tiruppur and Perundurai Constituencies;

(*b*) if so, whether any arrangements have been made so far; and

(*c*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) to (*c*) The question of providing irrigational facilities to Avanashi and other areas is under consideration.

State Planning Board (Constitution of)

* 305 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the State Government have refused to accept the proposal for the formation of a State Planning Board as suggested by the Central Planning Commission; and

(*b*) if so, the reasons therefor?

19th November 1963]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The Third Plan for this State was finalised only after full consultation with a Committee of this Legislature. The implementation of this Plan is being supervised by the State Development Committee which is a special Committee of the Cabinet. The existing arrangements for preparation of Plans and their implementation are found suitable and adequate. It has, therefore, been decided not to set up a separate State Planning Board for the present.

திரு. மீ. கலியாணசுந்தரம் : திட்டங்களைத் தயாரிக்கும்போது இந்தச் சபையில் இருக்கும் அங்கத்தினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டு திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் திட்டங்களை அமல் நடத்துவதைப் பரிசீலிக்கும்போது அம்மாதிரி சந்தர்ப்பம் அளிக்கும் வகையில், பொதுவாக இந்தச் சபையில் எடுத்துச் சொல்ல இருக்கக் கூடிய சந்தர்ப்பத்தைத் தவிர, தனியாக ஆலோசனைக் குழு கிடையாது. ஆகையால் மத்திய ப்ளானிங் கமிஷன் கூறியபடி ராஜ்ய அளவில் சட்ட சபை அங்கத்தினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவை நியமிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்ட சபை உறுப்பினர்கள் கொண்ட ஆலோசனைக் குழு அமைக்கவேண்டும் என்று அவர்கள் ஆலோசனை கூறவில்லை. பொதுவாக மாநில ரீதியில் ஒரு திட்டக் கமிஷன் அமைக்கவேண்டும் என்று கூறினார்கள். திட்டத்தைத் தயாரிக்க மற்ற உறுப்பினர்களின் ஆலோசனை கோரப்படுகிறது. அதோடு மாவட்ட டெவலப்மெண்ட் கவுன்சில் இருக்கின்றன. அவர்கள் அப்போதைக்கப்போது திட்டங்களை நிறைவேற்றுவதைப் பற்றி ஆராய்ந்து யோசனை கூறுகின்றார்கள். இந்த மன்றத்திலும் யோசனை கூற சந்தர்ப்பங்கள் பல ஏற்படுகின்றன. ஆகவே அதற்கு தனியாக திட்டக் கமிஷன் அமைக்கவேண்டியதில்லை என்பது இப்போதைய அரசாங்கத்தின் கருத்து.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மத்திய திட்டக் கமிஷனால் தீட்டப்படுகிற திட்டங்களை இங்கே உள்ள கமிட்டி பரிசீலிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் மத்திய அரசாங்கம் இந்த மாநிலத்துக்கு வேண்டிய திட்டங்களைத் தீட்டுவதற்கு தனியாக ஒரு திட்டக் கமிஷன் போட்டு, அந்தத் திட்டக் கமிஷன் தரும் திட்டங்களை மத்திய சர்க்கார் திட்டக் கமிஷனுக்கு அனுப்பினால் வசதியாக இருக்கும் என்று யோசனை கூறியதா? அது பற்றி நம் அரசாங்கத்தின் கருத்து என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய அரசாங்கம் கூறியது, அங்கு மத்திய ரீதியில் திட்டக் கமிஷன் இருப்பது போல மாநில திட்டக் கமிஷன் அமைத்தால் நலம் என்று கூறினார்கள். ஆனால் இப்போது சரியான முறை இல்லாமலேயே கவனிக்கப்பட்டு வருகிறது. போதிய அளவில் கவனம் செலுத்தப்பட்டும் வருகிறது. ஆகையால் இது தேவையில்லை என்று இந்த அரசாங்கம் முடிவு செய்தது.

[19th November 1963

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மத்திய திட்டக் கமிஷன் கொடுக்கக்கூடிய திட்டங்களைத்தான் பரிசீக்க இங்கே உள்ள குழுவுக்கு உரிமை உண்டா அல்லது இந்தக் குழுவே புதிய திட்டங்களை உருவாக்க உரிமை உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த மாநில அரசாங்கம் இந்த மாநிலத்துக்கு தேவையான திட்டங்கள், இருக்கக்கூடிய வருவாய் நிலை எல்லாவற்றையும் ஆராய்ந்து திட்டம் தயாரித்து அதைப் பின்னால் மத்தியக் குழு ஆராய்ந்து அது ஏற்றுக் கொள்ளப் படுகிறது.

Publicity for Plan Programmes

* 306 *Q.*—Sri K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether a team of experts visited this State from the Centre in connection with improving the publicity of the plan programmes; and

(*b*) details of their suggestions?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம் ஐயா.

(இ) இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழு யூனியனில் உள்ள எல்லா மாநிலங்களுக்கும் விஜயம் செய்த பிறகு, தனது அறிக்கையை இந்திய அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கும். அறிக்கையை இந்திய அரசாங்கம் பரிசிலனை செய்த பிறகு, அது இந்த மாநில அரசாங்கத்திற்குக் கிடைக்கும்.

நாசரெத் பாலிடெக்னிக்

*307 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் தாலுகாவில் உள்ள நாசரெத் பாலிடெக்னிக்கை மூடுவதாக சர்க்காருக்கு தகவல் கிடைத்துள்ளதா ?

(இ) அதைத் தொடர்ந்து நடத்துமாறு கோரி, திருச்செந்தூர் மக்கள் சர்க்காருக்கு விண்ணப்பித்துக்கொண்டுள்ளார்களா ?

(உ) அதன்மீது எடுக்கபட்ட நடவடிக்கை என்ன ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) Yes.

(*c*) The Government have decided to close down the institution, as requested by the management. The students of the above polytechnic who have passed their first year course have been admitted for their second year course in the nearby polytechnics at Virudhunagar, Talayuthu, Nagercoil and Madurai. A Government Polytechnic has been started at Tuticorin in lieu of the above Polytechnic and admission has been started afresh with effect from this year.